12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள் அருளியது

# அ.வி.தி. செயல்திருத்தக் குருவாணைகள்



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,120 புரட்டாசி மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

# உள்ளுறை

1. **"அ.வி.தி. செயல்திருத்தக் குருவாணை"** - 27/07/1985இல் குருதேவர் அ.வி.தி. தலைமைச் செயலாளருக்கு விடுத்த அஞ்சல் வடிவக் கட்டுரை.
2. **"இ.ம.இ. அரங்கின் மேல் அ.வி.தி.யின் வளர்ச்சி"** - அ.வி.தி. தொடர்பாக குருதேவர் தமது அடியான் திரு ம.சி.இராமன் அவர்களுக்கு 25/07/1985இல் விடுத்த மடல்.
3. **"இந்துமத வழிப் புரட்சி"** - குருதேவர் அவர்கள் தமது முசிறிச் சித்தரடியான் திரு க.பன்னீர்செல்வம் அவர்களுக்கு 18/06/1985இல் விடுத்த மடல்.
4. **"செயல்நலம் பாராட்டு ஊக்க ஆக்கத் திருவோலை"** - குருதேவர் அவர்கள் முசிறிச் சித்தரடியான் திரு க.பன்னீர்செல்வம் அவர்களுக்கு 01/08/1985இல் விடுத்த மடல்.
5. **"செயல்விளக்க அறிவிக்கை மடல்"** - குருதேவர் அவர்கள் அ.வி.தி. தலைமைச் செயலாளர் சித்தரடியான் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு 12/08/1985இல் விடுத்த மடல்.
6. **"பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை இ.ம.இ.யின் கௌரவத் தலைவராக ஏற்றது பற்றி இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர் சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி அவர்களின் சில கருத்துக்கள்"** - 1985இல் அச்சிட்ட அறிவிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது.

ஓம்

27/7/85.

# அ.வி.தி. செயல்திருத்தக் குருவாணை

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

2) நாம் மொழி, இனம், பண்பாடு, வரலாறு, இலக்கியம், அரசு, சமுதாயம், தொழில், பொருளாதாரம், பொதுவுடமை, உலக ஆன்மநேய ஒருமைப்பாடு, ... என்று மிக மிகத் தெளிவான கொள்கைகளையும், குறிக்கோள்களையும் உடையவர்கள். எனவேதான் மற்றவர்களைப் போல் திடீரென்று வளவளர்ச்சி பெறவில்லை. சாமியார்கள், குறிகாரர்கள், சோதிடர்கள், சித்து விளையாடல்காரர்கள், ... முதலியோரெல்லாம் பொருளும், புகழும், பதவியும், செல்வாக்கும் மிகக் குறுகிய காலத்தில் பெற்றிடும் போது நாம் ஏன் பெறவில்லை? அதுவும் இந்துமதத்தின் உயிராகவும், உடம்பாகவும், இயக்கமாகவும் உள்ள அனைத்து பேருண்மைகளையும், இரகசியங்களையும் தெரிந்தவர்களாக நாமிருந்தும்? - இந்த வினாக்களின் விடைதான் உண்மையில் நாம் யார்? நமது நிலையும் விலையும் என்ன என்பதை விளக்கும்.

3) **மெய்யான இந்துமத**த்துக்கும், *பொய்யான ஹிந்துமத*த்துக்கும் போர் ஆரம்பித்து விட்டது. *பொய்யான ஹிந்துமத*ப் பிருமணர்களும், அவர்களின் கூலிகளும், அப்பாவி ஆதரவாளர்களும் ஏராளம்! எல்லா வள வசதிவாய்ப்புக்களும் பெற்றவர்கள். எனவே, **மெய்யான இந்துமத**த்துக்குரிய நாம் மெல்ல மெல்லத்தான் வளர வேண்டும், வளர முடியும்.

4) நம்மிடையில் கட்டுப்பாடு, ஒழுங்கு, தலைமையை மதித்தல், குருவாணைப் படியே செயல்படல், குருவுள ஒப்புதல் பெற்றே செயல்படல், குறிப்பிட்ட அறிவிப்புப் படியும் திட்டமிட்ட படியும் செயல்படல், ... என்கின்ற மரபுகள் வலிமைப்பட்டேயாக வேண்டும். இல்லாவிட்டால், நமது நிறுவனங்களும், நிர்வாகங்களும் காகிதக் கப்பல் போலாகிடும். **எச்சரிக்கை.**

5) நம்மவர்கள் கொள்கை, குறிக்கோள், வரலாறு, தத்துவம், ... முதலியவை தெரிந்து கொள்ளக் கட்டுரைகள் **'மெய்யான இந்துமதமும், *பொய்யான ஹிந்துமதமும்*'** என்ற தலைப்பில் தயாராகின்றன. **குருதேவர் ஏட்டில் வெளியிடல், நூல்களாக அச்சிடல், கையெழுத்துப் பிறதிகளாகப் பரப்புதல் நிகழும்; நிகழ்த்தப்படல் வேண்டும்.** நம்மவர்கள் ஊர் ஊராக அ.வி.தி.யின் பெயரால் உல்லாசப் பயணம் செல்லுவதாகப் பழியேற்படுவது உடனே தடுக்கப்படல் வேண்டும். முன்பு போல் குருகுலத்தில் ஞாயிறு பரிகாரப் பூசை, அமாவாசை வேள்வி, பருவ பூசை யாகம் ... அருள் வழங்கினால் போதும். மற்றபடி நாம் அறிவித்துள்ள அ.வி.தி. நிலையப் பொறுப்பாளர்கள் பெரும்பாலும் தாங்களே அருள் வழங்கு பணிகளைச் செய்யட்டும். அல்லது யார் யார்? எந்தெந்த அ.வி.தி. நிலையங்களுக்கு? என்னென்ன கிழமைகளில் செல்லுகிறார்கள் என்ற விவரம் வாராவாரம் அனுப்பப்பட்டுப் பாதுகாப்பும், அருள்வழங்கும் சத்தியும் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனால் அனாவசியமான அலைச்சல், உறக்கக் கேடு, வேலைப் பாதிப்பு, குடும்பப் பாதிப்பு, ... முதலியவை தவிர்க்கப்படும். புதிய புதிய அ.வி.தி. நிலையங்கள் தோற்றுவிக்கப்படும். தனிமனிதப் பரிகாரங்களுக்காக அ.வி.தி. சுற்றுப்பயணங்களைக் குறைப்பதே நல்லது.

6) மாதாமாதம் பருவபூசையில் மாவட்டம் தோறும் ஒரு பதிலியையாவது குருகுலத்துக்கு அனுப்ப வேண்டும். நான்கு (4) நாட்களுக்கு முன்பே அனைத்து அ.வி.தி. நிலையங்களுக்கும், குருகுலப்

பருவ பூசை நாள் பற்றி நினைவு படுத்தி (Reminding call) அழைப்பு விடுக்க வேண்டும்.

**<u>குறிப்பு:-</u>**

(a) இனிமேல் பருவபூசைக்குச் சென்னையிலிருந்து யாராவது ஒருவர் பதிலியாக அனுப்பப்படுவர். முடிந்தவரை குருதேவர் ஏடு மொத்தமாகக் குருகுலத்துக்கே கொண்டு வரப்படும். <u>குருதேவரே கூட வரலாம். முன்னறிவிப்பின்றியே குருதேவர் குருகுலத்துக்குப் பருவபூசை நாளில் வருவார். இது இப்பொழுதே அறிவிக்கப்பட்டு விட்டது</u>.

(b) ..... ..... ..... *[அடியான்கள் இருவருக்கான தனிப்பட்ட கருத்துக்கள் இங்கே தரப்படவில்லை.]*

7) ‘இந்துமத விளக்கச் சொற்பொழிவு’, ‘வினவிடைக் கருத்தரங்கு’, ‘ஞாலகுரு சித்தர் கருவூரார் அருளுரை வழங்குகிறார்’ ... என்ற அறிவிப்பில் ஆங்காங்கே சொற்பொழிவு நிகழ்த்தும் திட்டம் ஆரம்பமாகி விட்டது. <u>18.8.85</u> பெரம்பூர் விவேகானந்தா கூடத்தில் சொற்பொழிவு நிகழும்.

8) விரைவில் சென்னையில் பல இடங்களிலும், சில மாவட்டங்களிலும் இதேபோல் கூட்டங்கள் நடக்கும். <u>மதுரை மாவட்டம்தான் அ.வி.தி.யின் தலைமைச் செயலகம்</u> என்பதால்; அ.வி.தி. சிக்கல்கள் சரியான பிறகு செப்டம்பர் 15 தேதிக்குப் பிறகே குருதேவரின் வருகை மதுரைக்கோ, குருகுலத்துக்கோ அமையும். இ.ம.இ.யின் கிளை அமைப்பே அ.வி.தி. என்ற முறையில் கட்டுப்பாட்டுடன், தலைமையின் ஆணைப்படி செயல்படுபவர்களையே அ.வி.தி. செயல்வீரர்களாகச் செயல்பட அனுமதிக்குமாறு அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம், பரமாச்சாரியார் நெ.சேவுகன் குருவாணை இடப் படுகிறார். இதற்காக அவர் திருமந்திற ஓலைநாயகமாக இருந்து அனைத்து இடங்களுக்கும் அருளாட்சித்

தாக்கீதுகளை அனுப்பட்டும். இனிமேல் அவர் கூடுமானவரை குருகுலத்திலேயே தங்கிச் செயல்படட்டும். **குருவாணை**.

**தலைவர், குருதேவர், அரசயோகி, ஞாலகுரு சித்தர் கருவூறார்.**

**27/7/85.**

**குறிப்பு:-**

(1) எம்மிடமிருந்து வரக்கூடிய அஞ்சல்களுக்கு அ.வி.தி. சுற்றுப்பயணத்தை காரணமாகக் காட்டித்தான் பரமாச்சாரியாரும், மற்றவர்களும் உடனுக்குடன் நகல் அனுப்பாமல் வந்திட்டார்கள். பரமாச்சாரியாரைப் பொறுத்தவரை நகலனுப்பும் பழக்கமே நின்று விட்டது. இனிமேல் அவர் எங்கும் செல்லத் தேவையில்லை. அவரின் பதிலியாக மற்றவர்கள் சென்றால் போதும் என்ற நியதி சட்டமாக்கப் பட்டுவிட்டதால் இனிமேலாவது நகல்கள் உடனுக்குடன் அனுப்பப் படுவதுடன்; பழைய கோப்புக்களுக்கெல்லாம் புதிய நகல்கள் எடுத்து, பன்னிரண்டு(12) கையெழுத்து பிறதி நூலகங்களுக்கும் அனுப்பும் பணி தொடரட்டும். **குருவாணை**.

(2) அன்புகூர்ந்து இராசுநாயுடு அவர்கள் ஒவ்வொரு கட்டுரையிலும் பதினைந்து (15) நகல்கள் எடுக்க வேண்டுமென்ற பெரு முயற்சியில் ஈடுபடுவதுடன் புதிய புதிய கார்பன் தாள்களை மாற்றி எழுதினால்தான் மூன்றாவது நகல் நன்றாக இருக்கும். அவர் ஒரு கோப்பில் தாம் நகலெடுத்த கட்டுரையின் நகல் ஒன்றினைத் தொடர்ந்து கோப்பில் தொகுத்து வரட்டும். ஒவ்வொரு கட்டுரையிலும் அக்கட்டுரையின் நகல்கள் எத்தனை குருதேவருக்கும், மற்றவருக்கும் அனுப்பப் பட்டன என்று குறிப்பிட்டு வைக்கவும். மூன்றாவது நகல் சரியாக விழ வில்லை என்றால் 1+1=2 என்று மட்டும் எடுக்கட்டும். இதுகாறும் அனுப்பிய நகல்களுக்கு மிக்க நன்றி. பாராட்டு. ஒரே மாதிரியான புதிய தாள்களை குயர் கணக்கில் வாங்கி வைத்துக் கொண்டு நகலெழுதினால் நல்லது. பலரிடமும் சென்று புதிய புதிய அஞ்சல்

கட்டுரைகளையும் பெற்று நகலெடுப்பது நல்லது. 'சிறு தெய்வ வழிபாடு' அனுப்பிய வரை போதும். நன்றி.

(3) மதுரை வட்டாரத்தில் நகலெடுப்பதற்கு நம்மவர்களின் குடும்பங்களில் ஓய்வுள்ள ஆண் பெண் அனைவருமே வீட்டிலிருந்த படி நகல்கள் எழுதி கையெழுத்துப் புரட்சியைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

(4) நமது இயக்கங்களுக்கென்று ஒரு பொது அலுவலகம் இருக்குமேயானால் அங்கு தங்கி இந்த நகலெடுக்கும் பணி சிறப்பாகச் செய்யுங்கள். அனைவரும் யோசித்துச் செயல்படுங்கள்.

(5) நம்மவர்கள் ஊர் ஊராகச் சென்று அ.வி.தி. பணியாற்றுவதை விட மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலே ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அன்றாடம் மாலையில், நம்மவர்களில் சிலராவது கூடி **கொள்கை முழக்கம்** செய்து செயல்பட்டால் போதும். அருளை வேண்டுபவர்களை குருகுலத்துக்கோ, வேறு அ.வி.தி. நிலையங்களுக்கோ வருமாறு அறிவித்தால் போதும். இதுதான் உடனடியாகத் தேவையானது, அவசரமானது, அவசியமானது. புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

அன்பு

**தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார், அரசயோகி,**
**குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார்.**
27/7/1985.

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியான் திரு ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது; இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பம் இடப்பட்டிருந்த அஞ்சலின் நகல்.//**

# இ.ம.இ. அரங்கின் மேல் அ.வி.தி. வளர்ச்சி

ஓம்

பொன்னேரி,
25/7/85.

பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் அவர்களுக்கு,

தலைமைப் பொறுப்பாளர் சி.கவிக்குமார் வரையும் மடல்.

நலம். நலம் காண ஆவல்.

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் நலமே.

2) தங்களுடைய நெடிய அஞ்சல் 24/7/85 அன்று கிடைக்கப் பெற்று, நானும் குருதேவரும் படித்து மகிழ்ந்தோம். நம்மவர்களுக்கிடையே வளர்ந்து வரும் கருத்து விளக்க வளர்ச்சி வரலாற்று இலக்கியமாகவே மாறி வருகின்றது. எமக்கு அனுப்பிய அக்கடிதத்தின் நகலிருந்தால் அனைவருக்கும் அனுப்பி வையுங்கள். நம்மவர்கள் தங்களுக்கு வருகின்ற அஞ்சல்களிலும், பிறருக்கு அனுப்பும் அஞ்சல்களிலும் சிறப்பு வாய்ந்தவை எனக் கருதுபவைகளை நகலெடுத்து குருதேவருக்கும் பிறருக்கும் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். ஏனென்றால், நமது இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், தலைவரின் செயல் திட்டங்களையும் ... வினாக் குறி எழுப்பி ஐயங்களைப் போக்கிக் கொள்ளும் பழக்கம் இருக்கின்றது. இந்த ஒழுங்குமுறைதான் அல்லது செயல்முறைதான் நம்மவர்களுக்கிடையில் கொள்கைத் தெளிவையும், பற்றையும், பாசத்தையும், ஒற்றுமையையும் வளர்த்திடும்! வளர்த்திடும்! வளர்த்திடும்!

3) நம்மவர்களுக்கிடையில் யார் இயக்கத்தில் அதிக நாள் இருப்பது? யாருக்கு குருதேவரை நன்றாகத் தெரியும்? யாருக்கு எழுத வரும்? யாருக்கு பேச வரும்? யாருக்கு ஞானக்காட்சி தெரியும்? யாருக்கு பூசையில் அனுபவம் மிகுதி? யாருக்கு பிறருக்கு அருள்நலம் செய்விப்பதில் அருளாற்றல் அதிகம்? யார் அதிகம் சுற்றுப்பயணம் செய்வது? ... என்ற கருத்துப் பிரிவினை அடிப்படையில் உயர்ந்தவர், தாழ்ந்தவர், சின்னவர், பெரியவர், தொண்டர், தலைவர், மதிப்பிற்குரியவர்கள், சாதாரணமானவர்கள் ... என்ற பாகுபாடுகள், பதவி நிலைகள்; சாதி வெறிகள் போன்று வளர்ந்து வருகின்றன. இவை வன்மையாகவும், கடுமையாகவும் கண்டித்துத் தடுக்கப்பட்டு முழுமையாக அகற்றப்பட வேண்டியவை! நாம் எல்லோரும் சமமே! என்ற சமத்துவ உணர்வு இல்லாவிட்டால் இன்றைக்கு நம் நாட்டில் கலை, இலக்கிய, சமய, சமுதாய, தொழில், அரசியல் கட்சிகளுக்குள் நிகழும் தலைமைச் சண்டையும், பதவிச் சண்டையும் நமக்குள்ளும் வளர்ந்து விடும். எனவே, ஆரம்பத்திலேயே வேருடன் களையெடுக்கப்பட வேண்டும். இதற்காக அனைவரும் தத்துவ ரீதியான போராட்டத்தில் ஈடுபட்டே தீர வேண்டும்.

4) **நம்மவர்கள் அனைவரும் நமது குருதேவரின் விளைநிலங்களே!** விளைநிலம் முழுவதிலும் கிணறு தோண்ட மாட்டார்கள். விளைநிலத்தின் மூலையில்தான் கிணறு தோண்டுவார்கள். அதுபோல் நம்மவர்கள் சிந்தைகளிலும், நெஞ்சங்களிலும் அருட்பயிர் விளைவிப்பதற்காக ஒட்டு மொத்தமாக சித்தர் நெறிச் செல்வர் என்ற நிலப்பரப்பில் நீரோட்டத்திற்கு ஏற்ப அருள்நீர் ஊறுகின்ற அருட்கேணிகளை உருவாக்கியுள்ளார் குருதேவர். இந்த அருட்கேணிகளே அருட்கணிப்பு வழங்குபவர்கள், ஞானக்காட்சியாளர்கள். அதாவது நிலத்தின் பரப்பளவுக்கு ஏற்ப நாலைந்து கேணிகளை தோண்டி நீர் இறைத்து அங்கே பயிர் செய்வது போல் இன்றைய தேவைக்கு ஏற்ப நாலைந்து அ.வி.தி. செயல்வீரர்கள் உருவாக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த அருள்நிலை

மட்டும் விவசாயம் ஆகிவிடாது. பரந்த நிலப்பரப்பில் இந்நீர் பாய்ந்து, விதையிட்டு, பயிர் விளைவித்து, விவசாயம் செய்து அறுவடை செய்ய வேண்டும்.

இதனைப் புரியாமல், கேணியிருக்கும் இடம் தெரியாமல் நாங்கள்தான் விவசாயியே எனக் கூறுவது விந்தையே! கேணிக்குள்ளேயே விதை விதைத்து விவசாயம் செய்யவா முடியும்? இதுபோல்தான் குருதேவர் ஒரு சிலருக்கு ஞானக்காட்சி ஆற்றலும், அருட்கணிப்பு ஆற்றலும், அருள் வழங்கும் ஆற்றலும் வழங்கி இருப்பதை மறந்து தாங்களே இயக்கம், தாங்களே அருட்பணி, தாங்களே இந்து மதம் ... என்று செயல்பட ஆரம்பித்திருக்கிறார்கள். இது தவறு, இது வருந்தத் தக்கது, இது திருந்தத் தக்கது.

நம்மவர்களில் யார் யாரை விளைநிலம் போல் பயன்படுத்த வேண்டும்? யார் யாரை நீர் ஊறும் கேணி போல் பயன்படுத்த வேண்டும்? என்பது குருதேவருக்குத்தான் தெரியும். எந்தக் கேணியில் எப்போது நீர் வறண்டு விடும்? எவ்வளவு காலத்துக்கு நீர் ஊறும்? எப்போது பாழடைந்து விடும்? என்பதெல்லாம் குருதேவருக்குத்தான் தெரியும். எனவே, குருதேவர் வழங்கியுள்ள அற்பமான சத்திகளையும், சித்திகளையும் வைத்துக் கொண்டு தற்பெருமையும், அகம்பாவமும், ஆணவமும், தலைமைக்குக் கட்டுப்படாமையும் வளர்த்துக் கொண்டு; தனக்கெனச் சிறு சிறு கூட்டத்தை வளர்த்துக் கொண்டு; தலைவருடன் அஞ்சல் தொடர்பு கூடக் கொள்ளாமலேயே தம்மைத் தலைவராக நினைத்துச் செயல்படுபவர்கள் சிலர் நம்மிடையில் தோன்றி விட்டார்கள். இவர்கள் குருவாணைகளை மறந்தும், துறந்தும்; மாறியும், மீறியும்; தங்கள் விருப்பம் போல் திருத்தியும், மாற்றியும்; குருவோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் தனிக்காட்டு இராசாக்களாக மாறி உள்ளார்கள்.

இதை எண்ணிப் பார்க்கும் போதுதான் நமது நாயன்மார்களோ, ஆழ்வார்களோ, அடியார்களோ, சாமியார்களோ, சாய்பாபாக்களோ

தங்களுடைய வாரிசுகளாக எவரையும் உருவாக்காமல் செயல்பட்டிட்டது ஏன் என்பது புலனாகிறது.

இன்றைய ஆரம்ப நிலையிலேயே குருதேவரால் உருவாக்கப் பட்ட அருட்செல்வர்கள் தங்களையே குருவாக எண்ணி தன்னிச்சையாகச் செயல்படும் நிலை உருவாகி விட்டது என்றால்; வருங்காலம் எப்படி இருக்கும்? எனவேதான் அ.வி.தி. வளர்ச்சியால், இ.ம.இ. தளர்ச்சியும், தாழ்ச்சியும், இகழ்ச்சியும், சிதைவும் பெற்றிருக்கின்றது என்று துணிந்து கூறி அ.வி.தி.யை இ.ம.இ.யின் நேரடி நிர்வாகத்துக்குக் கீழ் செயல்பட வைக்க வேண்டிய நிலை உருவாகி விட்டது. இல்லையெனில் இ.ம.இ.யுடன் இணையாகவே அது செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

5) “இரவு பகல் பாராமல் அ.வி.தி.க்காக ஒரு மணி நேர தூக்கமுமின்றி செயல்படுகின்றேன்” என்று தலைமைச் செயலாளர் கூறியுள்ளார். அவ்வாறு செய்ததில் இதுவரை இந்த இயக்கம் உண்மையான வளர்ச்சியைக் கண்டதே இல்லை. அப்படிப்பட்ட தீவிர தியாகங்கள் இயக்கத்திற்கு தேவையே இல்லை என்பதுதான் குருதேவரின் எண்ணம்.

வாராவாரம் எங்கு இனிமேல் அ.வி.தி.க்காக செல்வதென்றாலும் முன்னதாக குருதேவருக்கு கடிதம் எழுதி அனுமதி பெற்றுத்தான், அதாவது முறைப்படுத்தித்தான் செல்ல வேண்டும் என்ற இக்கட்டான கட்டாய நிலையை தலைமைச் செயலாளர் கொண்டு வந்துள்ளார். சாமியார்களுக்கும், வார வழிபாட்டு மன்றங்களுக்கும், பில்லி சூனியம் செய்கின்றவர்களுக்கும்; உங்களுடைய அ.வி.தி. பணிக்காக ஊர் ஊராக நாள் தோறும் செல்வதற்கும் என்ன வேறுபாடு? அருள் வேண்டுகின்றோர் வேண்டுமானால் நமது அ.வி.தி. நிலையங்களுக்கு வந்து செல்லட்டும்.

6) அவ்வாறில்லாமல் பல பேர் நமது அடியான்கள் ஊர் ஊராகப் புறப்பட்டு அ.வி.தி. என்று கூறி விருந்து சாப்பிட்டு

வருவதாகத்தான் நாங்கள் கருத வேண்டியுள்ளது. தேவையில்லாமல் பத்து பேர்களுக்குக் குறையாமல் கடந்த வாரங்களில் சுற்றுப்பயணம் செய்து உள்ளனர். இவர்களுக்காக அவர்கள் குறைந்தது ரூ.100/- செலவு செய்திருப்பார்கள். இரவீந்திரன் கூட ஊர் ஊராகச் சென்று அ.வி.தி. என்று கூறி பலிபொருள் நிறைய கேட்டு விருந்து சாப்பிடுவதாகத்தான் கடிதங்கள் சென்னைக்கு வருகின்றன. இதையெல்லாம் பார்க்கும் போது அ.வி.தி.யினால் வளர்ச்சி குன்றி, கெட்ட பெயரும் இழிவும்தான் வளர்ந்து வருகின்றதேயொழிய; அதற்கு தலைமைச் செயலாளரும் தலைமைப் பொறுப்பேற்று உள்ளார் என்கின்ற போது, ....? சற்று சிந்திக்க வேண்டுகின்றேன்.

அ.வி.தி. பணிக்காக தாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் குறைந்தது ரூ.100/- பணம் செலவழித்திருப்பீர்கள். ஆனால், தலைமைச் செயலாளரோ நாசூக்காக தமது கடிதத்தில் ‘பலி பொருள்கள் என்றால் ரூ.20/-, ரூ.30/- தருகின்றார்கள். சந்தா, புத்தகம் என்றால் தர மறுக்கின்றார்கள்’ என்று எழுதியுள்ளார். இது நகைப்புக்குரியது. பத்து பேருக்கு வரவழைக்க, உணவு சமைக்க செலவு செய்த அ.வி.தி. இல்லத்தவர்களிடம் ‘ரூ.20/- தந்தால் குருதேவரிடமிருந்து தகடு தருகின்றோம், குங்குமம் தருகின்றோம்’ என்று கூறி சந்தாவுக்கு வசூல் செய்ய இயலாதா? அல்லது அதே செலவில் ஒருவர் அல்லது இருவர் சென்று அ.வி.தி. பணிகள் செய்யக் கூடாதா? குருதேவர் வந்தால் செலவு, மனம் சுணங்குகின்றார்கள் என்று கூறும் தலைமைச் செயலாளர், தமது தலைமையில் பலர் இல்லத்திற்கு சென்று வந்தபோது அவர்கள் கூறிய கூற்று என்னவோ? இது ஏதோ ஏட்டிக்குப் போட்டியாக கூறுவதாக எண்ண வேண்டாம். குருதேவரை உவமானமாக வைத்து உண்மையை உணர வேண்டுகின்றேன்.

இதுவரை இந்த குறுகிய இடைவெளிக் காலத்தில் எத்தனை தனிமனிதர்கள் இல்லத்திற்கு சென்றுள்ளார். அத்தனை பேரிடத்திலும் சந்தா வசூல் செய்துள்ளாரா? பட்டியலிட இயலுமா? இ.ம.இ.யை

வளர்க்க இயலாது என்று கூறுகின்ற செயலாளர் அ.வி.தி. மூலம் எப்படி வளர்ப்பது என்பதை உணராதவரா? புரியாதவரா?

7) இதற்காக வேலைகளை விட்டுவிட்டு, பெண்டாட்டி பிள்ளைகளை விட்டுவிட்டு, இரவு பகல் தூங்காமல் கூட அ.வி.தி. பணியாற்றியதாகக் கூறும் போது; அங்கே இ.ம.இ. கொடி ஏற்றப்பட்டதா? நமது சித்தர் இலக்கியங்கள், கலைகள், கருத்துக்கள், சமய சமுதாய அரசியல் கருத்துக்கள் விளக்கப் பட்டனவா? வாய்மூடி மௌனியாக சென்று வருவதே இந்த அ.வி.தி. பயணங்கள் என்றால் இந்த அ.வி.தி. பணிகள் தேவையில்லை, தேவையில்லை, தேவையேயில்லை. அ.வி.தி. வளர்ச்சி தேவை என்ற கருத்தில்தான் தனிச் செயலகம் அமைத்துள்ளோம். இனிமேலாவது குறைந்த இடைவெளியில் குறைந்த செலவில் இரண்டு மூன்று பேர்களோடு அ.வி.தி. பயணத்தை நிகழ்த்துங்கள். அப்போது இ.ம.இ. கொடியை ஊரில் நடுவில் ஏற்றுவதோடு; தகடு, குங்குமம், ... என்ற பெயரால் (குருதேவர் சந்தா என்றால் புரியாதவர்களுக்கு) தாராளமாக வாங்கி அனுப்பலாம். இப்படித்தான் இ.ம.இ.யையும், அ.வி.தி.யையும் இணைக்க வேண்டும்.

இன்றைய தினம் அ.வி.தி.யே தமது உயிர்மூச்சாகக் கருதி தொண்டாற்றி வரும் தலைமைச் செயலாளர் பரமாச்சாரியாரையே மண்டலப் பூசையில் அவர் எங்கே? என்று கேட்கும் நிலைமை உருவாகி உள்ளது. அவருக்கு ஞானக்காட்சி தெரியுமா? கடவுள் தெரியுமா? அவருக்கு நோய் போக்கத் தெரியுமா? இவரைப் போல பேச வருமா? .... என்றெல்லாம் அவரையே யார் என்று ஆழம் பார்க்கும் சிறு கூட்டங்கள் அவருடைய செயலகத்திலேயே உருவாகி உள்ளது. இந்தத் தவறையாவது தாங்கள், தங்களைப் போன்றோர் அ.வி.தி.யின் தேவையற்ற, முறையற்ற வளர்ச்சியால் உருவாகிப் போன தீய பயிர்கள் என உணர வேண்டுகின்றேன். இந்நிலை அவருக்கு மட்டுமல்ல; அனைத்து அடியான்களுக்கும்தான். எப்பொழுது தன்னை, இ.ம.இ.யின் கருத்துக்களின் அடிப்படையில் வளர்த்துக்

கொள்கின்றூர்களோ, அங்கேதான் அவர்களைப் பற்றிய உண்மையான உருவத்தை (Image) மற்றவர்கள் மத்தியில் உருவாக்க இயலும். தம்மை கருத்துலக வாதி, சிந்தனு வாதி, மருத்துவ வாதி, அருளுலக செயல் வாதி ... என்று மற்றவர்கள் உணர வேண்டுமானுல் **இந்த இ.ம.இ. அரங்கின் மேல் அ.வி.தி.யை வளர்க்க வேண்டும்**.

8) இனிமேல் எந்த அ.வி.தி. பணிக்காக சுற்றுப்பயணம் செய்வதானுலும்; குருதேவர் சந்தா எனக் கேட்காமல் குருதேவரிடமிருந்து அருளூறு பூசனைப் பொருள்கள் அல்லது முடிகயிறு அல்லது தகடு வந்த பின்னுல்தான் வர இயலும் என்று கூறி ரூ.25/- பெற்று அனுப்பியாக வேண்டும். அதற்கு குருதேவர் மேற்கூறியவற்றில் ஒன்றையும், மாதம் தோறும் குருதேவர் அறிக்கையும் அவர்களுடைய முகவரிக்கே அனுப்புவார். மதுரையில் உள்ள நண்பர்கள் மதுரையில் உள்ள கோயில்களில் சென்று சொற்பொழிவுகளை அடிக்கடி நிகழ்த்தினுல் போதும். குருதேவரிடமிருந்து ஒப்புதல் வந்த பின்பே அ.வி.தி.க்காக சிலர் பயணங்கள் மேற்கொள்ள வேண்டுகின்றேம்.

மற்றவை பின்பு.

அன்பு

**சி.கவிக்குமார் B.Sc.**

நகலெடுத்தவர்:-

அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலைக்காரி ஆதீனம், சித்தர் மகன், சித்தர் வாரிசு, சித்தரடியான் ம.செ.விசயராகவன் B.Sc., (S/O C.M.செயராமன், 2/80 சுப்பிரமணியர் கோவில் அருகில், வேம்படிதாளம் P.O., சேலம் மாவட்டம், PIN 637504.)

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியான் திரு ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# இந்துமத வழிப் புரட்சி

சென்னை-11,
18.6.85.

பேரன்புக்கும், பேரார்வத்துக்கும், உண்மையான உயர்ச்சிக்கும், தொண்டு உணர்ச்சிக்கும், அரிய முயற்சிக்கும் உரிய அருள்மிகு ஓமாந்தூர் பெரியண்ணசாமி சன்னிதானம், க.பன்னீர்செல்வம் அவர்களுக்கு (Phone Inspector, Telephone Exchange, Musiri - 621211.); ஞாலகுரு சித்தர் கருவூரர் அவசர அவசியமாகத் தாங்கள் அனுப்பிய அஞ்சல் தாளிலேயே விடுக்கும் பதில்.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! எல்லா வல்லமைகளைப் பெற்றிருந்தாலும் எம் செயலாக எதனையும் செய்யாமல் செயலாற்றுகின்றோம், யாம். எனவே, திருக்கள், தருக்கள், கருக்கள், குருக்கள், உலக அருளாளர்கள் எமக்கு உதவியாக வழங்கும் வசதிவாய்ப்புக்களையே அருளுலகப் புரட்சிக்குச் சாதனங்களாக்கி வருகின்றோம். எனவே, உங்களையும், உங்களது ஆர்வங்களையும், ஆற்றல்களையும், முயற்சிகளையும் பாராட்டுகின்றோம், வரவேற்கின்றோம்.

2) தாங்கள் எப்பொழுது எம்மை அழைத்தாலும் யாம் நேரில் வரத் தயாராக இருக்கின்றோம். நாம் பசனைக் கூட்டம் அல்ல. பாராயணமோ, கதா காலச்சேபமோ, ஆடம்பர விழாவோ நமது கொள்கையல்ல, செயல்திட்டமல்ல. அனைத்து மதங்களும், மொழி இன பண்பாட்டு விடுதலையோடு, பூங்காவில் பூத்த மலர்கள் போல் இருக்க வேண்டும்.

3) இன்றைய நிலையில் இந்து மதத் தலைவர்கள், சித்தியாளர்கள், உயர் சாதிக்காரர்கள்; உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளோடு சேர்ந்து கொண்டு கற்பனைகளையும், பொழுதுபோக்குகளையும் வளர்த்து

வருகிறார்கள். இவர்கள் விரும்பியே மதப் போர்களையும், சாதிச் சண்டைகளையும் வளர்க்கிறார்கள். இவற்றிற்கு அப்பாற்பட்டவர்கள் நாம்.

நாம் இந்துமத வரலாறு, தத்துவம், செயல்சித்தாந்தம், கலை, இலக்கியம், போதனை, சாதனை, ... விளக்கிட முன்வந்துள்ளோம். நமது கடமையைத் தெளிவாகத் துணிந்து எழுதி முடித்து விட்டோம். சொல்லவும், செய்யவும் புறப்பட்டுள்ளோம். எனவே, கடுமையான சட்டதிட்டக் கட்டுப்பாடு, திட்டுதல், கண்டித்தல், தண்டித்தல், ... கையாளப்படுவது சரியே. சிலர் தேறினாலும் போதும், தேறாவிட்டாலும் பாதகம் இல்லை. எழுத்தும், சொல்லும், செயலும் காலப்போக்கில் வெற்றி பெறும்.

மதவழிப் புரட்சிக்கு நேரம் நெருங்குகிறது. உணர்த்துவோம். ஒன்று திரட்டுவோம். மதவாதிகளை அறிவு விழிப்போடு ஒற்றுமைப்படுத்தி எழுச்சி பெறச் செய்ய வேண்டும். கற்பனாவாதங்களை விட்டுவிடச் சொல்ல வேண்டும். மதவாதிகளின் அறிவும், வலிமையும் அதிகமாகி வளப்படுகின்றன. அதாவது மதவழிப் புரட்சிக்கு நேரம் நெருங்குகிறது. இந்துமதத்தை முறையாகவும், முழுமையாகவும், உண்மையாகவும் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்தவர்களால்தான் **“இந்துமத வழிப் புரட்சி”** பற்றி எண்ணிச் சிந்திக்க முடியும்.

உடனடியாக விரிவாக விளக்கமான பதில் அனுப்புங்கள். உங்களின் பொருட்டு எல்லாவித அருள்நிலைகளும் வழங்கப்படும். கவலை வேண்டாம். வாரம் இருமுறை அல்லது ஒருமுறையாவது எமக்கு அஞ்சல் எழுதிக் கொண்டே இருங்கள்.

அன்பு

**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**

**இந்துமதத் தந்தை,**

18/6/85.

**<u>நகலெடுத்தவர்:</u>** அருள்மிகு கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலைக்காரி ஆதீனம், சித்தரடியான் சித்தர் மகன், ம.செ.விசயராகவன் B.Sc., [S/O C.M.செயராமன், 2/80, சுப்பிரமணியர் கோயில் அருகில், வேம்படிதாளம், சேலம் மாவட்டம்-637504.]

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

## <u>இயக்க நிலை பற்றி குருதேவர் கூறுவது:</u>

..... குருதேவர் கூட அடிக்கடி கூறுவது இதைத்தான்; "<u>நான் எழுதியதை இன்றைக்கு இல்லையென்றாலும் என்றாவது ஒருநாள் இந்த நாட்டில் செயல்படுத்தினால் போதும்</u>" என்று. ஒருவரே தலைமைதாங்கிச் செய்யவேண்டும் என்று விரும்பியிருப்பாரேயானால்; சித்தர் ஏளனம்பட்டியாரே செய்து விட்டுச் சென்றிருப்பார். ஏன் செய்யவில்லை?; இன்றும் கூட இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், "நமது இயக்கம் பக்குவப் படவில்லை. அரசியல் இயக்கமாக மாற்றும் அளவுக்குத் தகுதியில்லை. ஏன் பொதுமக்களிடம் விரைந்து செயல்படும் அளவுக்குக் கூடத் தகுதியில்லை!" என்று எண்ணுகின்றார். அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையிலேயே நாம் இந்த வித்தியாசங்களைக் காண்கின்றோம். இந்த நிலையில் இன்னும் பெரியதாக மாறினால் என்னவாகும்??????.....

*[13/03/1984இல் தலைமைப்பீடத்திலிருந்து பரமாச்சாரியார் நெ.சேவுகன் அவர்களுக்கு எழுதப்பட்ட அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்டது.]*

ஓம்

1/8/85,

செம்பியம்.

To

 க.பன்னீர்செல்வம்,

டெலிபோன் இன்சுபெக்டர்,

கலிங்கன் லேன், காந்திநகர், முசிறி-621211.

# செயல்நலம் பாராட்டு ஊக்க ஆக்கத் திருவோலை

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

2) தங்களின் அஞ்சல் நேற்று 31/7/85 அன்றிரவு பொன்னேரியிலிருந்து திரும்பியதும் படிக்கப் பட்டு பூசையில் வைக்கப் பட்டு அருளுலகத்தாரின் கருத்துக்கள் பெறப்பட்டு இத்திருவோலை விடுக்கப் படுகிறது.

3) பேரன்புடையீர்! யாம் தலைவர், குருதேவர், இந்துமதத் தந்தை, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் கருவூரர் என்ற முறையில் பொருளுலக இருளகற்றும் அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளோம். யாம், இம்மண்ணுலகை விட மூத்த பழமையான, தொன்மையான மிகப் பெரிய அண்டபேரண்டமாளும் அருளாட்சித் தத்துவத்தின் வாரிசே. யாம் தத்துவப் புரட்சியை, கருத்துப் புரட்சியை, எண்ணப் புரட்சியை, உணர்வுப் புரட்சியை, சித்தாந்தப் புரட்சியை, இலக்கியப் புரட்சியாக நிகழ்த்தவே முயலுகிறோம். அதாவது எமது புரட்சி காகிதப் புரட்சியே. எமது உணர்வுகளுக்கும்,

எண்ண ஓட்டங்களுக்கும், செயல் நாட்டங்களுக்கும் திட்டவட்டமான அடிப்படைகளும், வழிமுறைகளும், செயல்வகைகளும் இருக்கின்றன.

எனவே, யாம் மற்ற சாமியார்கள், பூசாறிகள், சித்தியாளர்கள், அருளாளர்கள், மதத் தலைவர்கள், ஆச்சாரியார்கள், பீடாதிபதிகள் ... முதலியோர்கள் போல கூட்டம் சேர்ந்தால் போதும் என்று செயல்படுபவர்கள் அல்ல. எம்மைப் பொறுத்தவரை பயிர் செய்யப்பட்ட காய்கறிகளையும், கனிவகைகளையும் வழங்குபவர் அல்ல யாம். மேற்சொன்ன காய்கறியையும், கனிவகைகளையும் பயிர் செய்கின்ற விதைகளையும், நாற்றுக்களையும் பயிர் செய்பவர்கள் ஆவோம் யாம். இதனைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

4) யாம் தனிமரமாக இருந்து விட்டுப் போக வரவில்லை. யாம், எம்மால் முடிந்தவரை அடர்காடுகளையும், சோலைகளையும், தோப்புக்களையும், நஞ்சை புஞ்சைப் பயிர்களையும் அருளுலகில் பசுமைப் புரட்சியாக விளைவிக்க வந்துள்ளோம். எனவே, எம்மிடம் வருபவர்களை அருட்பயிர் விளைவிக்கும் உழவர்களாக, அருட்பயிர் பண்ணைகளை உருவாக்கும் பண்ணைக்காரர்களாக, அருட்பயிர்த் தொழிலில் தேர்ச்சி பெற்ற கலைஞர்களாக உருவாக்கவே விரும்புகிறோம். ஐநூறு ஆயிரம் கோடி ஆண்டுகளாக காக்கப்பட்ட மறைகளை (இரகசியங்களை) முறையாகவும், நிறையாகவும் மானுடர்க்கு வழங்கும் மாபெரும் முயற்சியில் இறங்கியுள்ளோம். இவற்றால் கற்பனையென்றும், மடமையென்றும், மூடநம்பிக்கையென்றும் கருதப்படும் மதத்தை விஞ்ஞானப் பூர்வமானது; பகுத்தறிவுக்குரியது; சோதனைகளின் சாதனைகளால் விளைந்தது; மனித வாழ்வுக்கு இன்றியமையாதது என்று விளக்கி நிலைநாட்டி வருகிறோம்.

5) நண்பரே! யாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி என்பதால் எமக்குப் பிறகு முப்பத்தாறு (36) பீடாதிபதிகள்

தோன்றுவார்கள் என்று எண்ணியே செயல்படுகிறோம். பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தான் இம்மண்ணுலகிலுள்ள அனைத்து அருள்நிலைகளுக்கும், கலைகளுக்கும் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும் இருக்கிறார்கள். எனவேதான், **அவர்கள் தோற்றுவித்த இந்து மதத்தின் சார்பாக "வாருங்கள்! எல்லோரும் கடவுளாகலாம்!", "வாருங்கள்! எதையும் கடவுளாக்கலாம்", "வாருங்கள்! மனித வாழ்வின் ஆரம்ப முடிவுகளையும், அரிய பயன்களையும் புரிந்து கொள்ளலாம்", "வாருங்கள்! உங்களை நீங்களே அருளாளராக்கிக் கொள்ளலாம்", "வாருங்கள்! அருளை அநுபவப் பொருளாக அடையலாம்; அடுத்தவர்க்கு வழங்கலாம்", .... என்று துணிந்து கூறிச்** செயல்திட்டங்களை வழங்கிச் செயல்படுகிறோம்.

6) இவற்றையெல்லாம் உணர்ந்து எம்மைக் குறிகாரனாகவோ, மந்திரவாதியாகவோ, சித்து விளையாடல்காரனாகவோ அறிமுகப் படுத்தாமல் சித்தராகவே அறிமுகப்படுத்த முயற்சி செய்யுங்கள். எம்மைத் துறையூருக்கு அழைக்க விரும்புகிறவர்களில் முதன்மையானவர்கள் மதுரை கொட்டாம்பட்டி காரியேந்தல்பட்டியிலுள்ள எமது தலைமைச் செயலகத்துக்கு ஏதேனும் ஒரு ஞாயிற்றுக்கிழமை சென்று எமது தத்துவ நிலைகளையும், செயல்சித்தாந்த நிலைகளையும் நேரில் கண்டு வர வேண்டும். எமது தலைமைச் செயலாளர் (அ.வி.தி.) அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம், பரமாச்சாரியார், திருமந்திற ஓலைநாயகம் நெ.சேவுகன், ஆசிரியர் அவர்களைச் சந்தித்து கருத்துப் பரிமாறல், உரையாடல் நிகழ்த்தித் தெளிவு பெற்றாக வேண்டும்.

அதன்பிறகே அவரையும், அவரோடு ஒரு சிலரையும் அழைத்து வந்து துறையூர் வட்டார நண்பர்களுக்கிடையில் அறிமுகப் படுத்தி எமது வருகைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களே எமது அறிவுரை, அருளுரை, அறிவார்ந்த அருளுரை, அருளார்ந்த அறிவுரை என்ற நான்கும் நிகழ்ந்திட ஏற்பாடு செய்வார்கள். அத்துடன்

உலகியலாக இலக்கியச் சொற்பொழிவுகள், சமுதாயச் சொற்பொழிவுகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள், இந்துமத ஐயங்களுக்கு விஞ-விடை முதலியவை நிகழுவதற்கும் ஏற்பாடு செய்வார்கள். எனவே, அவசரப்பட்டு எமக்குப் பணத்தை அனுப்பிஞல் போதும், யாம் சுற்றுப்பயணம் வந்து விடுவோம் என்று எதிர்பார்க்க வேண்டாம். அது தங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏமாற்றத்தை நல்கிடும். எச்சரிக்கை! புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

7) நண்ப! அன்புகூர்ந்து அளவுக்கதிகமான நிகழ்ச்சிகளே குறுகிய கால அளவில் வைத்து பொதுமக்களுக்கு ஏமாற்றத்தை நல்கிட வேண்டாம். யாம், அருளே அநுபவப் பொருளாக வழங்க விரும்புகின்ருேம். பலருக்கும் முக்காலத்தையும் கணிக்கும் அருட்கணிப்பு ஆற்றலேயும், ஞானக்காட்சி ஆற்றலேயும் அருட்கொடையாக வழங்க விரும்புகிருேம். எம்மால் ஒருசில அருளுலக விதைப் பண்ணேகளும், நாற்றுப் பண்ணேகளும், அருட் சோலேகளும், அருட் கோட்டங்களும், பூங்காக்களும், ... உருவாக்கப்படல் வேண்டும் என்பதே எமது சுற்றுப்பயணத்தின் நோக்கம்.

ஏனெனில், சித்தர்களால்தான் பிறருக்கு எந்த அருளாற்றலேயும் வழங்க முடியும். மேலும், ஆர்வமுள்ள மனிதர்களின் தரம், உரம், தீரம், ஆற்றல், உட்கிடக்கை, முயற்சி நிலே, ... முதலியவைகளே எடையிட்டே அவற்றிற்கேற்ப அருட்கலேகளே சித்தர்களால்தான் வழங்க முடியும். சித்தர்கள் பசனேக் கூட்டத்தையோ, கண்மூடித்தனமான வழிபாட்டுக் கும்பலேயோ, மாயாசித்தி தரும் மந்திரங்களேயோ வழங்குபவர்கள் அல்ல; அல்லது உருவாக்குபவர்கள் அல்ல. எனவே, அறிவு விழித்த நிலேயில் எதையும் செயலாக்கும் சூழ்நிலேகளே உருவாக்குங்கள்.

8) நண்ப! இதுகாறும் யாம் வெளியிட்டுள்ள குருதேவர் அறிக்கைகளும், புத்தகங்களும், அறிவிக்கைகளும் சுமார் நூறு ரூபாய் மதிப்புக்குரியவை. எனவே, எம்மை அழைக்க விரும்பும் நண்பர் வட்டாரத்திலிருந்து யாராவது ஒருவர் வந்தோ, அல்லது அஞ்சல் வழியாகவோ யாம் அச்சிட்டு வைத்துள்ளவைகளைப் பெற்று; துறையூர் வட்டாரத்தில் பலருக்கும் வழங்கி எம்மைப் பற்றி ஓர் அறிமுகத்தை உருவாக்கிய பின்னர் எம்மை அழைத்தால் நல்லது. எமது தலைமைச் செயலாளரும் (அ.வி.தி.), அவரது நண்பர்களில் சிலரும் எமது வருகைக்கு முன் துறையூர் வட்டாரத்தில் நன்கு சுற்றி வந்து கருத்துரைகளும், கலந்துரையாடல்களும் வழங்குவார்களேயானால் அது மிகப் பெரிய விழிச்சியையும், எழிச்சியையும், மலர்ச்சியையும் விளைவிக்கும்! விளைவிக்கும்! விளைவிக்கும்!

9) பேரன்புடையீர்! யாம் மனிதர்களோடு மனிதராக வாழ்ந்தே உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்க விரும்புகிறோம்; அதற்காகவே பொருளுலக இருளகற்றும் அருளாட்சி அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். எனவே, எம்மைக் காட்சிப் பொருளாக ஆக்கிட வேண்டாம். அனுவசியமான ஆடம்பரங்களோ, ஆரவாரங்களோ, விருந்துகளோ தேவையில்லை.

<u>“யாம் எமது வாழ்க்கையை ஒரு தெய்வீகச் சோதனையாக” (The Test of Divinity) நிகழ்த்தி வருகிறோம்</u>. அனைத்துக்கும் சான்றுகளையும், ஊன்றுகளையும், சாட்சிகளையும், சாதனைப் பட்டியல்களையும் வழங்கியே நிதானமாக, ஆனால் நிலையாக வளர்ந்து வருகிறோம். **பதினெண்சித்தர்களின் இந்து மதத்**திற்கும், *வடஆரியர்களின் ஹிந்து மதத்*திற்கும் உள்ள வேறுபாடுகள் (The differences and the distinctions between the **original Induism** and the *duplicate Hinduism*) விளக்கப் படுவதைப் பொறுத்தே நமது வளவளர்ச்சியும்,

வலிமைமிகு வெற்றியும் அமையும்! அமையும்!! அமையும்!!! எனவே, பொறுப்போடும், பொறுமையோடும் செயல்படுங்கள். இனிமேலாவது வாரத்திற்கு ஓர் அஞ்சலாவது கட்டாயமாக எழுதுங்கள். எமது ஒப்புதலின்றி எந்தப் பயணத் திட்டத்தினையும் ஏற்பாடு செய்ய வேண்டாம்.

ஓம் திருச்சிற்றம்பலம்.

1/8/85.

அன்பு -

**தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

1/8/85.

**திருவோலை நாயகமாக இருந்து எழுதிவர்:**

அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம், சித்தர் மகன், ம.செ.விசயராகவன் B.Sc., (S/O C.M.செயராமன், 2/80, சுப்பிரமணியர் கோயில் சமீபம், வேம்படிதாளம் P.O. 637504, சேலம் Dt.)

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியான் திரு ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல். நகலின் இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பம் இருந்தது.//**

பொன்னேரி,
12.8.85.

# செயல்விளக்க அறிவிக்கை மடல்

1. அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

2. அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் அமாவாசை ஆய்வுக் குழுவில் பேசுவதற்காகக் கருத்துக்கள் கேட்டமைக்கும், அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் M.C.இராமன் 15.8.85 சுதந்திர தின விழாவில் அலங்காநல்லூரில் பேசுவதற்காகக் கருத்துக்கள் கேட்டமைக்கும் சேர்த்து அவசர அவசியமாக ஓய்வின்மையாலும், கைவிரல் பாதிப்புள்ளமையாலும், இரவு 9 மணி வரை நிறுவன நிர்வாகக் குழு ஆய்வுகள் நிகழ்த்தியதாலும், மீண்டும் இன்று (திங்கட்கிழமை) வார ஆய்வுக் கூட்டத்தில் ஆய்வுகள் நிகழ்த்த இருப்பதாலும் விளைந்த ஓய்வின்மையின் காரணமாக இந்த அறிவிக்கை மடல் தாமதமாக அனுப்பப்படுகின்றது.

3. தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, ஞாலகுரு சித்தர் கருவூரூர் கூற பல்லவப் பெருமண்டலத்துத் துணைக் குருவாணை ஓலைநாயகம் அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப் பெருமான் சன்னிதானம் சித்தரடியார் ஏ.இரவி திருவோலைநாயகமாக இருந்து வரையும் மடல்.

இங்கிருந்து குருதேவரின் நிறுவன நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களிலிருந்து ஒருவர்; அநேகமாக கு.சத்திவேல் B.E., 14.8.85 இரவே புறப்பட்டு 15.8.85 காலை 10 மணியளவில் மதுரை வந்து சேருவார். ஏனென்றால், அவருக்கு Rockfort Expressஇல்தான் reservation கிடைத்தது. அவர் திருச்சி வந்து பின்னர் அங்கு வர வேண்டும். அவர் அலங்காநல்லூர் கூட்டத்தில் அவசியம் கலந்து கொள்ளுவது நல்லது. அவரை வரவேற்க யாராவது ஒருவராவது

மதுரை இரயிலடியில் வந்து தங்கியிருந்து அலங்காநல்லூர் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்க! முடிந்தால் அவருக்கு நேரிடையாக ஓர் அஞ்சல் எழுதி தங்களின் ஏற்பாட்டைத் தெரிவியுங்கள்.

4. கடந்த 500 கோடியாண்டுகளிலே முதன்முதலில் பதினெண்சித்தர் பீடாதிபதி அரசயோகத்தைச் செய்து முடித்ததும், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் என்ற நிலையைச் சாதித்ததும் இப்பொழுதுதான் என்பதால் துணிச்சலாக முதன்முதல் அடுத்த பதினெண்சித்தர் பீட நிலைக்கு இரண்டு வாரிசுகள் உருவாக்கப் பட்டிருக்கின்றனர்கள். முதல் வாரிசு சந்திரகுலத்துக்கு உரியவராக உருவாக்கப்பட்டு செந்தில்குமார் என்ற பெயரில் வளர்க்கப்பட்டு; வருகிற 15.8.85இல் பத்தாவது பிறந்த நாள் விழா கொண்டாட உள்ளார். நமது அருளுலக வாரிசுகளை குருவழி வாரிசுகளாக உருவாக்கப் பட்டிருப்பதால்; இந்தப் பிறந்த நாளில் ஏதேனும் ஒரு நேரத்தில் பூசை செய்து; முடிந்தால் அருகிலுள்ள ஏதேனுமோர் வழிபாட்டு நிலையத்தில் தாங்களாகவோ அல்லது பூசாறிகளின் மூலமோ இன்றைய குருமகா சன்னிதானத்தின் கருவழி வாரிசோடு தங்களுக்கும் அருளுலகத்தாரின் வாழ்த்துதல்கள், அருள்வழங்கல்கள், அருட்பயன்கள் வழங்கப் பட வேண்டுமென்று வேண்டிக் கொள்வது சிறந்த பயனை நல்கும்.

முடிந்தால் அ.வி.தி. நிலையங்களில் "அனைத்து வகையான அருளுலகத்தார்களும் குருதேவரின் இரு கருவழி வாரிசுகளையும் வாழ்த்துவது போல்; குருவழி வாரிசான தங்களையும் வாழ்த்த வேண்டும் என்று வேண்டிக் கொள்வது சிறந்த பயனை நல்கும். மேலும், குருதேவரின் இரண்டாவது கருவழி வாரிசான சூரியகுலத்துத் தோன்றல் சூரியகுமாரின் பிறந்த நாளுக்கு சனவரி 23.1.1986 இப்பொழுதே எங்களுடைய பூசைகளையும், வேண்டுகோள்களையும் தெரிவித்துக் கொள்கிறோம், நாங்களும் எங்களது வாரிசுகளும் அருளாட்சிச் செல்வங்களாக, இயக்கங்களாக, நிறுவனங்களாக, பணியாளர்களாக இருந்து வெற்றி பெறுவதற்கு எங்களை வாழ்த்துங்கள்"

என்று கூறி அவரவர் அருட்பட்டங்களைப் பூசையின் ஆரம்பத்திலும், முடிவிலும் கூறி அருளுலக அறிமுகம் செய்து கொள்ளுங்கள்.

5. நம்மவர்கள் இதுவரை வெளி வந்துள்ள 18 மாத குருதேவர் அறிக்கைகளையும் தங்களுக்கு ஓய்வு உள்ள பொழுதெல்லாம் பள்ளி மாணவர்கள் பாடப் புத்தகத்தைப் படிப்பது போல் படித்திடுவார்களேயானால் சொற்பொழிவு ஆற்றுதற்கோ, கருத்து விளக்கக் கலந்துரையாடல்கள் நிகழ்த்துவதற்கோ, விவாதங்களிலும் பட்டிமன்றங்களிலும் பங்கு பெறுவதற்கோ, பிறரின் ஐயங்களை அகற்றுவதற்கோ கருத்துக்களைத் தேடிப் பெருமுயற்சி செய்யத் தேவையில்லை. அதாவது, பொதுவாகவே சித்தர்களின் கருத்துக்கள் விதைப் பண்ணைகளிலிருந்து வழங்கப் படும் சத்தான வித்துக்களைப் போன்றவையே. எனவே, விதைகளை விதைத்துப் பயிர் செய்து விளைச்சலை அறுவடை செய்து கொள்ளுவது போல் குருதேவர் ஏட்டிலும், மற்ற தனிப் புத்தகங்களிலும், அச்சிட்ட அறிக்கைகளிலும், அறிவிக்கைகளிலும், பீடாதிபதியின் கட்டுரைகளிலும், அஞ்சல்களிலும், நேரடிச் சொற்பொழிவுகளிலும், கலந்துரையாடல்களிலும், ... கிடைக்கின்ற கருத்து வித்துக்களை நம்மவர்கள் தங்களுடையச் சிந்தனையோட்டங்களிலும், எண்ண வயல்களிலும், உணர்வுக் காடுகளிலும், ... விதைத்துப் பயிர் செய்து அறுவடை செய்து வளமான வலிவான தத்துவ வாழ்வு வாழுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள்.

6. முதலில் நம்மவர்கள் நமது இயக்கம் இன்றைக்கு நாட்டிலுள்ள அனைத்து வகையான இயக்கங்களையும் விட எப்படிச் சிறந்தது? எந்த அளவு பயன்மிக்கது? எந்த அளவு மிகமிகத் தேவையானது? ... என்ற ஆய்வுக் கருத்தோட்டங்களை தங்களுக்குத் தாங்களே நிகழ்த்திக் கொள்ள வேண்டும். அதன்பிறகே சன்னிதானப் பட்டம் பெற்றவர்கள் மட்டும் கூடியிருக்கக் கூடிய கூட்டங்களில் அருட்பட்டம் பெறாதவர்களை வெளியேற்றி விட்டு நம்மவர்கள் மட்டுமே விவாதிக்க வேண்டும். இவை அழிவுப் போக்கில் (Destructive Approach) நிகழ்த்தப் படவே கூடாது. அனைத்து வகையான உரையாடல்களும்

கனிவோடும், பணிவோடும், துணிவோடும், அமைதியோடும், உண்மைகளை உணர்ந்து கொள்ளும் நோக்கிலேயே நிகழ்த்தப்பட வேண்டும். இல்லாவிட்டால், மேற்படி ஆய்வுக் கூட்டங்களே நம்மிடையே போட்டி பொறாமைகளையும், வெறுப்பு மறுப்புக்களையும், தேவையில்லாத பிரிவினைகளையும், குழு மனப்பான்மைகளையும் (Groupism) உருவாக்கிடும், உருவாக்கிடும், உருவாக்கிடும். எச்சரிக்கை.

**குறிப்பு:-** செந்துறை சுடாலின் (Stalin) வழக்கு நமக்குத் தேவையில்லாத தொல்லையாகத்தான் அமைந்து விட்டது. அவர்களுக்கு தத்துவ விளக்கமும் தெரியவில்லை; நமது தலைமையிடத்தும், ஆற்றலிடத்தும் முழுமையான நம்பிக்கையுமில்லை. எனவே, எக்காரணம் பற்றியும் இவர்கள் குருகுலத்திற்கு வந்து அருள்பெற்றுச் செல்லத் தேவையில்லை. அதாவது இவர்களுக்கு சித்தர் நெறியிடத்தும், சித்தர் நெறித் தலைமையிடத்தும், சித்தர் நெறிச் செயல்வீரர்களிடத்தும், செயல்முறைகளிடத்தும், தாத்தாக்கள் ஆத்தாக்களிடத்தும் முழுமையான பற்றும், நம்பிக்கையும் ஏற்படுத்தப் பட்டுத்தான் ஆக வேண்டும்; அதன்பிறகே இவர்களுக்குத் தேவையான நன்மைகள் விளைந்திடும்.

அதாவது ஒருவனுக்குப் பாம்பு கடித்தால் அவனுக்கு உடனடியாக முதலுதவி செய்ய வேண்டுமே தவிர; பாம்பையும், பாம்புப் பிடாரனையும் தேடிக் கொண்டிருக்க முடியாது. இனிமேல் இவர்கள் குருகுலத்திற்கு எக்காரணம் கொண்டும் வரத் தேவையில்லை. பொதுவான அருட்பணி விரிவாக்கத் திட்ட நிகழ்ச்சிகளில் வேண்டுமானால் இவர்கள் கலந்து கொள்ளலாம். இவர்களுக்குப் பீடாதிபதியே இங்கிருந்து தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். ஓட்டைச் சட்டியில் எவ்வளவுதான் தண்ணீர் ஊற்றினாலும் தண்ணீர் நிற்காது என்பது போல், இவர்களுக்கு என்னதான் மந்திரித்தாலும் அருள் வழங்கினாலும் அருட்பயன் விளையாது. எனவே, நமது குருதேவர் செப்டம்பர் 15ஆம் தேதி மதுரை வரும் வரை இவர்கள் குருகுலத்துக்கு வரவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! கடுமையான எச்சரிக்கை.

அதாவது சித்தர் நெறியெனும் ஆற்றில் ஓடும் அருட்சத்தி நீரை இக்குடும்பத்தார் ஓட்டைக் குடத்தில் செந்துறை வரை எடுத்துச் செல்வதால் வீடு போய்ச் சேர்வதற்குள் குடம் காலியாகி விடுகிறது. திருவாளர் சுடாலின் அவர்கள் அவர் விருப்பபப்படி வேட்டி சட்டையாகவோ அல்லது முழுக்கால்சட்டையும், சட்டையுமாகவோ (Pant and Shirt) குருதி வண்ணச் சிவப்பில் அணிந்தேயாக வேண்டும். தாடி, மீசை, முடி அனைத்தும் வளர்த்தேயாக வேண்டும். பரமாச்சாரியார் தருப்பைப் புல்லை எரித்து விளக்கெண்ணையில் குழைத்து (கருவறை உயிர்ப்பு மந்திரங்களைச் சொல்லி நள்ளிரவு 11 to 1:30 இந்த மையை மந்திரித்துக் கொடுத்தால் போதும்) தருகின்ற மையை புருவம், மீசை, தாடி, தலை முதலியவைகளில் அன்றாடம் காலையிலும் மாலையிலும் இலேசாகத் தடவி; நெற்றியில் திருநீறுப் பட்டையாகப் பூசி குங்குமப் பொட்டும் மஞ்சள் பொட்டும் வைத்து வீட்டில் தாத்தாக்கள் ஆத்தாக்களை வேண்டி வசதி வாய்ப்புப்படி சிறிது நேரமாவது பூசைகளைச் செய்து தமது மருத்துவத் துறையில் ஈடுபடலாம்.

எத்தகையப் பாதிப்புக்கள் சரோசினி தேவிக்கு வந்தாலும் இவரே மந்திரித்து திருநீறு பூசினால் போதும். இவரை பாரதக் காலத்துத் தன்வந்திரியின் திருவடியாகவும், பாரதகாலத்து பாஞ்சாலி எனும் திரௌபதியின் சன்னிதானமாகவும், ஆத்தாள் தேவி சுடலைக்காளியின் பீடமாகவும், ஆத்தாள் தேவி பழையனூர் நீலியின் தம்பிரானாகவும் அருளுலகத்தார்கள் அறிவிக்கிறார்கள். இதன்படி இவர் உடனே செயல்பட ஆரம்பித்தால்தான் சித்தர் நெறியாலும், சித்தர் நெறிச் செல்வர்களாலும், சித்தர் நெறி இயக்கங்களாலும் இவருக்குப் பயன் விளையும். இந்த அருளாணையை மாறியோ, மீறியோ, புறக்கணித்தோ, ஒதுக்கியோ, பதுக்கியோ, புதுக்கியோ, ... திரு சுடாலினும், சரோசினி தேவியும் செயல்படுவார்களேயானால் இனிமேல் அவர்களுக்கும் நமக்கும் தொடர்பே தேவையில்லை. இனிமேல் அவர்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று அருள்நலம் பெற்றுக் கொள்ளலாம். இதனை உடனடியாகவும்,

முழுமையாகவும் செயலாக்கும் பொறுப்பு நம்மவர்கள் அனைவருக்கும் உரியது. புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

7. **<u>ஓர் எச்சரிக்கை அருட்கணிப்பு</u>:-** பாரதகாலத்து துரோணாச்சாரியாரான பரமாச்சாரியார் நெ.சேவுகன் அவர்களுக்குச் சோதனையாகவே பாரத காலத்து ஏகலைவனின் அணுக்களில் சில செந்துறை சரோசினியாக வடிவமெடுத்துள்ளது என்ற அருட்கணிப்பு நேற்று 11.8.85 நள்ளிரவுப் பூசையில் குருதேவர் நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் எதிர்பாராமல் கணிக்கப்பட்டது. எனவே, சரோசினி தேவியாருக்கு அவரது கணவரான சித்தரடியார் அருள்மிகு பாரத காலத்து பாஞ்சாலி எனும் திரௌபதியின் சன்னிதானம் சுடாலினைத் தவிர வேறு யாராலும் மந்திரிக்க முடியாது, மந்திரிக்கவும் கூடாது. எனவே, திரு சுடாலின் அவர்கள் இடது கையில் திரிசூலமும், மெய்ஞ்ஞானக் கொடியும் பிடித்து வலது கையில் மயில்பீலி ஏந்தி அன்றாடம் பூசை முடிவில் காலை மாலை மந்திரிக்க வேண்டியதுதான். இதற்காக இவர் “சீவ காயந்திரி மந்திரத்தை” சிவபுராணம் பாடிய பிறகு அன்றாடம் 48 முறை நள்ளிரவில் ஓதி தன்னை அருளாளராக ஆக்கிக் கொள்ள வேண்டும். (48 தடவைக்கு மேலும் கூட ஓதலாம், இவருக்கு உடலில் தெம்பும் வசதிவாய்ப்பும் இருந்தால்.)

இந்த அருளாணையையும், குருவாணையையும் ஏற்றுச் செயல்பட்டிட்டால்தான்; எதிரிகள், திரு சுடாலின் மீது ஏவி பிறகு அவர் மனைவியின் மீது நடத்தும் ஏவல்கள் முழுமையாக முறியடிக்கப் படும். எனவே, மந்திரவாதிகள், திரு சுடாலின் நமது அருளாணைப் படியும், குருவாணைப் படியும் செயல்பட முடியாமல் மிகத் தந்திரமாகத் தடுத்து விடுவார்கள். எனவே, திரு சுடாலின் அவர்களின் மூலம்தான் அவர் மனைவிக்கு அருள்நலம் விளைவிக்கப்பட வேண்டும். அப்படி அவருக்கு முழுமையாக அருள்நலம் விளைவிக்கப்பட்டால்தான் சரோசினி தேவி நமது ஊர்வலத்துக்கு வரலாம், அருட்பணிகளில் ஈடுபடலாம். அதுவரை அவரிடம் குரு பேசுவதோ, ஞானக்காட்சிகள் தெரிவதோ நிகழாது, நிகழாது, நிகழாது. ஆனால், மந்திரவாதிகள் திறமையாக

குரு பேசுவது போலவும், ஞானக்காட்சி தெரிவது போலவும் செய்வார்கள். காரணம், வளர்ந்துவரும் துரோணுச்சாரியாரான பரமாச்சாரியார் நெ.சேவுகன் அவர்களை எதிர்த்து மந்திரவாதிகள் துவக்கியிருக்கும் மறைமுகமான போரே (The Indirect war of the magicians against Paramaachaariyaar Mr N.Sevugan. This conclusion is given by His Holiness Siddhar Kaakkaiyar Mr M.Palanisamy Pillai.) என்று சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளையவர்கள் தெரிவித்திருக்கிறுர்கள். இவற்றைப் புரிந்தும் புரியவைத்தும் நம்மவர்கள் எச்சரிக்கையோடு செயல்படுவார்களாக. எச்சரிக்கை.

<u>குறிப்பு</u>:- முழுமையான நலம் சரோசினி தேவியாருக்கு ஏற்படா விட்டால் அவர்கள் செப்டம்பர் மாதத்தில் குருதேவர் மதுரை வரும்போது சந்திக்க வரத் தேவையில்லை. இதை விவரமாக நமது இயக்கத்தவர்களுக்கும், சரோசினி, திரு சுடாலின் அவர்களுக்கும் உடனடியாக கூறுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதுபோலத்தான் கமலா பரமசிவம், சண்முகவல்லியும் நேரிடையாகவே மீனுட்சியம்மன் ஆலயத்திற்குச் சென்று தேவையான அருட்சத்திகளையும், சித்திகளையும், தற்காப்புப் பரிகாரங்களையும் பெற்றுக் கொள்ளுமாறு ஏற்கனவே குருவாணை வழங்கப் பட்டிருக்கிறது. எனவே, சரோசினி தேவியாருக்குக் கூறப் பட்டிருக்கும் இந்தப் பரிகாரத்தைப் புதியதாகவோ, நமது புறக்கணிப்பாகவோ கருதத் தேவையில்லை. புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக! செயல்படுக! செயல்படுக! எச்சரிக்கை.

அன்பு

**பல்லவப் பெருமண்டலத்துத்**
**துணைக் குருவாணை ஓலைநாயகம்,**
**சித்தரடியார் ஏ.இரவி.**

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

**பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை இ.ம.இ.யின் கௌரவத் தலைவராக ஏற்றது பற்றி இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர் சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி அவர்களின் சில கருத்துக்கள்.**

1. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பெற்றுத் தரமுடியாத உயர்ச்சியை இந்து மதத்துக்கு பெரியார் ஈ.வெ.ரா. ஈட்டித் தந்தார் என்பதை உணர முற்படுங்கள்.
2. பெரியார் ஈ.வெ.ரா.வின் வழியில் இந்துமத மறுமலர்ச்சிப் பணிகள் நிகழ்ந்தால்தான் மத மடமைகள், சுரண்டல்கள், ஆபாசங்கள், பயனற்றவைகள், தவறுகள், ... முதலியவை அகற்றப்படும். பின்னர்தான் பதினெண்சித்தர்கள் படைத்த **சித்தர் நெறி யெனும் இந்துமதத்தின்** பயன்கள் உலகுக்குத் தெரியும்.
3. "**பதினெண்சித்தர்கள் படைத்த பகுத்தறிவு நிறை இந்துமதம் பார்ப்பனரால் பாழ்பட்டது**" என்ற பேருண்மையைப் பறை சாற்றிய பெரியாரைப் புரிந்து செயல்படுவதுதான் தமிழ் மொழி, இன, பண்பாட்டு, நாகரீக விடுதலைகளை நல்கும்! நல்கும்!! நல்கும்!!!
4. பெரியார் ஈ.வெ.ரா.தான் "சமசுக்கிருத மொழி இந்துமத பத்தி நெறி, சத்தி நெறி, சித்தி நெறி, முத்தி நெறி .... முதலிய அனைத்துக்கும் சாவுமணி அடித்து விட்டது" என்பதனைத் "தமிழ்மொழியில்தான் அருட்சினை செய்ய வேண்டும்" என்ற கருத்தால் தெளிவாக விளக்கினர்.
5. பெரியார் "உண்மையான இந்துமதத்தின் செழுச்சியால்தான் இன விடுதலைகள், மொழி விடுதலைகள், பண்பாட்டு உரிமைகள், பொதுவுடமைகள் விளைந்திடும்" என்றதை ஆராய்ந்துணர முற்படுங்கள்.

**பெரியார் ஈ.வெ.ரா.வின் குறிக்கோள் வெல்க!**
**பெரியார் ஈ.வெ.ரா.வின் கொள்கை வாழ்க!**
**தமிழ் வாழ்க! தமிழினம் உரிமை பெறுக!**

**இந்து மறுமலர்ச்சி இயக்கச் செயற்குழு.**

**//மூலம்: 1985இல் அச்சிட்ட அறிவிக்கையின் ஒரு பகுதி.//**

**“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**



“... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் வடஆரியர்களின் வேதமத மாயையிலிருந்தும், சமசுக்கிருத மொழியின் பிடியிலிருந்தும் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும் விடுவித்தால்தான் அருளாட்சி அமைக்க முடியும் என்று கண்டறிந்தார். இப் பேருண்மையினை விண்டுரைத்திட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களை உருவாக்கி காவல் தெய்வங்களைப் புத்துயிர்ப்புச் செய்யும் பணியைச் செய்திட்டார் ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com